# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்! கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து, தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். (பிலிப்பியர்: 2:5-7)



# புலம்பெயர்ந்தோர், அகதிகள் உலக தினச் செய்தி 2020

## -ஆயர் பெர்னர்ட் பவுல்-

## “இயேசு கிறிஸ்துவைப் போல் அகதியாக ஓடும் கட்டாய நிலைக்கு ஆளாகுதல்”

இன்று செப்டம்பர் 27-ஆம் தேதி நாம் புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கான உலக தினத்தைக் கொண்டாடுகிறோம். இந்த ஆண்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கருபொருள் “இயேசு கிறிஸ்துவைப் போல் அகதியாக ஓடும் கட்டாய நிலைக்கு ஆளாகுதல்” என்பதாகும்.

உலகம் முழுவதும் சிதறடிக்கப்பட்டுள்ள எண்ணற்ற புலம்பெயர்ந்தோருடன் நாம் இன்று இணைக்கிறோம். கோவிட் -19 தொற்றுநோய் புலம்பெயர்ந்தோர், அகதிகள், இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் மனித கடத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரை மிகவும் கடுமையாகத் தாக்கியுள்ளதை மறுக்க இயலாது. இச்சூழலில், வத்திக்கானின் "புலம் பெயர்ந்தோர் மற்றும் அகதிகள்’ அலுவலகம், மேற்குறிப்பிடப்பட்ட மக்களில் யாரையும் மறக்கக்கூடாது" என்று உண்மையாக நமக்கு நினைவூட்டு கிறது.

இக்காலக்கட்டத்தில் இவர்களில் பலர் கோவிட் 19-ன் நடமாட்டக் கட்டுப்பாடு ஆணையின் காரணமாக நடமாட்டக் கட்டுப்பாடில் சிறைப்பட்டிருப்பாதாக உணர்கிறார்கள். மற்றும் பலர் ஆபத்தான நிலையில், கைவிடப்பட்ட, ஓரங்கட்டப் பட்டச் சூழலில் வாழ்வுக்கான தக்க கவனிப்பின்றி நிராகரிக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் பெரும் துன்புறுத்த லிருந்துத் தப்பி ஓடும் நிலைக்குக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் புலம்புகிறார்கள். உண்மையில் இவர்கள் உள்ளம் நொறுங்குண்டவர்கள்.

நாமும் அவர்களைச் சந்திக்கிறோம். அவர்களது துன்ப வாழ்க்கைப் பாதையை நாமும் கடந்துப் போனதுண்டு. ஆனால், அவர்களில் நாம் ஆண்டவரைக் கண்டோமா? அவர்களைத் தப்பி, அகதியாக ஓடும் இறைவனாகப் பார்த்தோமா? அவர்களின் அழுக்கு, சிதைக்கப்பட்ட உருவம், மோசமான நெருக்கடி ஆகியவற்றில் அவர்களைச் சந்திக்க நாம் முயற்சி எடுக்கும் போதுதான் அவர்களில் இயேசுவைச் சந்தித்கிறோம் என்பதை நினைவில் கொள்வோம்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 4 எளிய வினைச்சொற்களுடன் அவர்களுக்கான கவனிப்பு அடங்கியுள்ளதை விவரிக்கிறார்:

1. வரவேற்பு, 2. பாதுகாப்பு, 3. ஊக்கு விப்பு, 4. ஒருங்கிணைப்பு ஆகியவை அவை.

இவ்வாண்டு இத்தினத்தையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் மேலும் 6 வினைச்சொற்றோடர்களை அறிமுகப் படுத்துகிறார்:

1. புரிந்து கொள்ள எனக்குத் தெரியும்
2. சேவையாற்ற நெருங்கி செல்ல வேண்டும்.
3. ஒப்புரவாக செவிமெடுக்க வேண்டும்.
4. வளர்ச்சிக்குப் பகிர வேண்டும்.
5. ஊக்குவிப்பைச் செயல்வழி வெளிப் படுத்த வேண்டும்.
6. கட்டி எழுப்ப ஒத்துழைக்க வேண்டும் என்பனவாகும்.

ஒரு எளிய “வரவேற்பு”, நமது அக்கறை காட்டும் பணியை எளிதாக்கும். புலம்பெயர்ந்தோரோடு நெருக்கமாக இருக்க அவர்களை நெருங்குங்கள். அவர்களில் ஆண்டவர் உள்ளார்.

கடவுள் உங்களை ஆசிர்வதிப்பாராக. நாம் ஒன்றிணைந்து அவரது ஆட்சியை கட்டி எழுப்புவோம்.

**மேதகு பெர்ன்ர்ட் பவுல்**
**ஆயர்- மலாக்கா-ஜோகூர் மறைமாவட்டம்.**

*குறிப்பு:*

*உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதி களாக வாழ்வோர் தொடர்பில் விழிப் புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அகில உலக அகதிகள் தினம் கடைப்பிடிக்கப் படுகின்றது.*

*ஐக்கிய நாட்டுப் பேரவையால் 2000-ம் ஆண்டு அகில உலக அகதிகள் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.*

# மக்களை நாடிச் செல்லாத திருஅவை நோயுற்றதாக மாறிவிடும்

உலகின் ஒவ்வொரு மூலையிலும் இருக்கும் மக்களை நாடிச்செல்லாத திருஅவை, தனக்குள்ளேயே முடங்கி, நோயுற்றதாக மாறிவிடும் என உரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறைநம்பிக்கையை அனுபவிக்காதவர்கள், இறைவனுடன் கூடிய சந்திப்பில் கிட்டிய ஒளியையும் பலத்தையும் இழந்தவர்கள், என்றும், அனைத்து மக்களையும் நாடி நாம் செல்லவேண்டும் என்றும், தன் மூவேளை செப உரையில் கடந்த வாரம் விண்ணப்பித்தார்.

வெளியேறிச் சென்று, மக்களைத் தேடும் இறைவனைப்போல், நாமும் மக்களைத் தேடிச் செல்ல வேண்டும் என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆபத்துக்களைக் கண்டு முடங்கிவிடாமல், வெளியில் சென்று நற்செய்தியை அறிவிக்கவேண்டிய திருஅவையின் கடமையை நினைவூட்டினார்.



வேலையாள்கள் எவ்வளவு மணிநேரம் வேலை செய்தார்கள் என்பதைக் கணக்கிடாமல், அனைவருக்கும் சமமானக் கூலியை வழங்குவது, இறைத்தந்தையின் நன்மைத்தனம் என்றுரைத்தார்.

திராட்சைத்தோட்டத்தில் பணிபுரிய வேலையாள்களைத் தேடிச்சென்ற நிலக்கிழார், இறைவனின் அடையாளம் என்றுரைத்த திருத்தந்தை, அதைப்போல் நாமும் இறைவன் தோட்டத்தில் பணிபுரியும் மக்களைத் தேடிச்சென்று உதவுபவர்களாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்

மனித சிந்தனைகளின்படி பார்க்கும்போது, ஒருவரின் மகத்துவம் என்பது, அவரின் வெற்றிகளைச் சார்ந்து முதலிலிருந்து கடைசி என வரிசைப்படுத்தப்படுகின்றது, ஆனால், இறைத்தந்தையின் கருணைக்கு தங்களை ஒப்படைப்பவர்கள், கடைசி நிலையிலிருந்து, முதல் நிலையில் தங்களைக் கண்டுகொள்வார்கள் என தன் டுவிட்டர் செய்தியில் எழுதியுள்ளார்

# மீட்புக்கால நடமாட்டக் கட்டுப்பாடு நீட்டிப்புக்கு ஏற்ப, பினாங்கு மறைமாவட்டத்தில் புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் (சுருக்கம்)

அன்புள்ள அருட்பணியாளர்கள், துறவர அருட்சகோதர-சகோதரிகள், பணிக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் பொதுநிலையினரே,

உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி, இரக்கம் மற்றும் எதிர்நோக்கின் வாழ்த்துக்கள்!

டிசம்பர் 31, 2020 வரை நடைமுறையில் இருக்கும் மீட்புக்கால நடமாட்டக்கட்டுப்பாடு ஆணைக்கிணங்க, பினாங்கு மறைமாவட்டத்திற்கான புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல்களை 2020, அக்டோபர் 1 முதல் கடைபிடிக்கும் வேளை, தற்போது நடைமுறையில் உள்ள நிர்ணயிக்கப்பட்ட பணிக்கான நெறிமுறைகளையும் (SOP) கவனத்தில்கொள்ள வேண்டும்.

இது, பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையை இடத்தின் அளவில் மூன்றில் ஒரு பகுதியாகக் கட்டுப்படுத்துவது, வெப்பநிலை கண்காணிப்பு, வருகையைப் பதிவு செய்தல், MySejahtera பயன்பாட்டைக் கொண்டிருத்தல், கட்டாய, முறையான வகையில் ஒன்றுகூடுதலுக்கு முன்னும் பின்னும் கிருமிக்கொல்லி திரவத்தால் சுத்தம் செய்தல், உடல் ரீதியான இடைவெளியைக் கடைபிடித்தல் போன்றவையாகும். அத்தோடு, உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் மற்றும் நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் எந்தவொரு பங்கேற்பிலிருந்தும் விலகி இருப்பதுமாகும்.

நமது பாதுகாப்பு நடவடிக்கையாக, மூன்று முக்கிய அம்சங்களைத் தவிர்க்குமாறு சுகாதார அமைச்சகம் தொடர்ந்து வலியுறுத்துகிறது

**தவிர்க்க வேண்டியவை:**

1.நெரிசலான இடங்கள்,
2.வரையறுக்கப்பட்ட இடங்கள்,
3.நெருக்கமான உரையாடல் .

**அவசியம் பின்பற்ற வேண்டியவை:**

1. அடிக்கடி கைகளை கழுவுதல்,
2. முகக்கவசங்களை அணிதல்,
3. கோவிட்-19-ன் அவ்வப்போதைய நிலவரத்தை அறிந்திருத்தல். .




கீழ்கண்ட வழிகாட்டுதல்கள் செயல்படுத்தப்பட்டாலும், வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் அந்தந்த மாவட்டங்களின் நிலைமையைப் பொறுத்து உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கேற்ப அவை தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும்.

1. அன்றாட திருப்பலிகள், இறுதிச் சடங்குகள், திருமணங்கள், பெரியோர் திருமுழுக்கு, மற்றும் உறுதிப்பூசுதல் ஆகியவற்றை மீண்டும் தொடங்கலாம். அனைத்து மறைக்கல்வி வகுப்புகள், முதியோர்க்கான கிறிஸ்தவப் புகுமுக அருட்சாதன சடங்கு ( RCIA) அமர்வுகள், உருவாக்கப் பயிற்சிகள் ஆகியவை பங்குத் தந்தையின் ஆலோசனைக்கேற்ப தொடங்கப்படலாம்.

2. 70 வயதுக்கும் அதற்கு மேற்பட்ட பங்கு மக்கள் மற்றும் 12 வயது, அதற்குக் குறைவான குழந்தைகள் திருப்பலியில் பங்கெடுப்பது ஊக்குவிக்கப்படவில்லை என்றாலும், அவர்ககள் கலந்துகொள்வதைத் தடை செய்யக்கூடாது. இதில் பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

3. வழிபாட்டுத் தலங்கள் அந்தந்த மாநில அதிகாரிகளால் விதிக்கப்பட்ட கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை. (தயவு செய்து அந்தந்த மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுடன் தொடர்பு கொண்டு கண்டறியவும்)

பங்குகள் மேற்கண்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடைமுறையில் உள்ள நிர்ணயிக்கப்பட்ட பணி நெறிமுறைகளுக்கேற்ப செயல்பட ஊக்குவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு அத்தியாவசியக் கூட்டத்தின் போதும் மக்கள் அனைவரின் பொதுவான நன்மையையும் கருத்தில் கொண்டு, ஆக்கப்பூர்வமான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் உறவை வளர்க்கும் நோக்கத்தில் செயல்பட வேண்டும்

இந்த புதிய இயல்பு நிலையை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சியை நாம் படிப்படியாக மேற்கொள்ளும் வேளை, தூய ஆவியாரின் வழிகாட்டுதலில் ஒரு சமூகமாக வாழ்வதற்கும், இன்னும் திருப்பலிகளில் நம்மோடு இணைய இயலாதவர்களுக்காகவும் இறைவேண்டல் செய்வோம். கடவுள் அவரது ஆசீரைப் பொழிய நான் வேண்டுகிறேன்.

**எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள்; துன்பத்தில் தளரா மனத்துடன் இருங்கள்; இறைவேண்டலில் நிலைத்திருங்கள். (உரோ 12:12)**

எதிர்நோக்கின் சீடராய் இருங்கள்
கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள

**+மேதகு செபஸ்தியன் பிரான்சிஸ்.**
**ஆயர், பினாங்கு மறைமாவட்டம்.**
21 செப்டம்பர் 2020

# தாழ்ச்சியில் நிறைவுகொள்வோம்!

*சொல்லுக சொல்லிற் பயனுடைய*
*சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல் -(குறள் 200)*

பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்ல வேண்டும்; பயன் இல்லாதவற்றை சொல்லவே கூடாது என்பது திருவள்ளுவரின் வாக்கு.

இன்றைய ஞாயிறு வாசகங்கள் நம்மையும் அதுபோன்ற வாக்குறுதியைப் பற்றிச் சிந்திக்க அழைக்கின்றன. கடவுள் நமக்குக் கொடுத்த வாக்குறுதி என்னெவென்று நாம் அனைவரும் அறிவோம். அதுதான்; கடவுள் நமது மீட்புக்காக அவர் அனுப்பிய மானிடமகன். அவரின் கீழ்ப்படிதலால் நாம் அனைவரும் மீட்கப்பட்டோம். நம் விண்ணகத் தந்தை அவர் தந்த வாக்குறுதிக்கு ஏற்ப தம் மகனை அனுப்பி, அவரின் விலை மதிப்பில்லாத இரத்தத்தால் நம்மை மீட்டு, நமக்கு விண்ணகத்தை உரிமைச் சொத்தாக்கினார்.

இன்றைய முதல் வாசகத்தில் எசேக்கியேல் இறைவாக்கினர் வாயிலாக இறைவன், நாம் நேர்மையானவர்களாக இருந்தால், நம் உயிரைக் காத்துக்கொள்ள நம்மால் இயலும் என்று வாக்குறுதி கொடுக்கிறார். ஆனால் பல வேளைகளில் நேர்மையற்ற வகையில் நடந்துகொண்டு, அதன் பலனாக நாம் துயரத்தில் விழுந்தால், அதற்காக நாம் இறைவனையே குற்றம் சாட்டுவோம். பழைய ஏற்பாட்டு காலத்தில் இஸ்ராயேல் மக்களும் அவ்வாறே நடந்துகொண்டனர். எண்ணற்ற தடவை இறைவனின் குரலுக்குக் கீழ்ப்படியாமல், அவரின் குரலுக்குச் செவிசாய்க்காமல் நடந்து, மகிழ்ச்சியான வாழ்வை இழந்தனர். அடிமைகளாக நாடு கடத்தப்பட்டனர்.

நம்மையும் இறைவன் அவரின் குரலுக்குச் செவிசாய்க்க அழைக்கின்றார். கீழ்ப்படிவதே நமக்கான அழைப்பு. திருப்பாடலின் ஆசிரியர் கூறுவதுபோல நாமும் பல முறை மன்றாடியிருப்போம். "ஆண்டவரே, உமது பேரன்பிற்கேற்ப என்னை நினைத்தருளும்; ஏனெனில், ஆண்டவரே, நீரே நல்லவர்"

ஆண்டவர் நமக்குக் கொடுத்த வாக்குறுதி இதுதான். அவரது அன்பு அளவிட முடியாதது. அவர் மட்டுமே நல்லவர். கடவுள் நமக்குக் கொடுத்த பாதையில் நடந்தால் நமக்கு வாழ்வு உண்டு. திருப்பாடலின் ஆசிரியர் தாம் நடந்துவந்த நேரிய பாதையில் இருந்து விலகி, அதனால் ஏற்பட்ட இழப்பை உணர்ந்து, மீண்டும் ஆண்டவரின் திரும்பி வருவதே இந்தப் பாடலின் முக்கிய மன்றாட்டு. அவரின் குரலுக்கு எப்போதும் செவிசாய்த்தால், இந்த உலகைப் பொருத்தமட்டில் மடமையாக இருந்தாலும், படைத்தவரின் முன்னிலையில் நாம் வெற்றியாளர்களே. ஏனென்றால், திருத்தூதர் பவுல் கூறுவதுபோல, தூய ஆவியாரின் துணையைக் கொண்டு, நம்மைப் பற்றியே சிந்திக்காமல், பிறரின் நலனில் அக்கறைக் கொள்ளவும், கிறிஸ்துவைப் போன்ற மன நிலையைக் கொண்டிருக்கவும் இறைவன் நம்மை அழைக்கிறார்.

இயேசு இறைமகன் என்ற ஒரு நிலையைப் பற்றிக்கொண்டிராமல், அடிமையாக, தாழ்மை நிலை பூண்டு, நமக்காக தம் இறப்பு வரைக்கும் கீழ்ப்படிந்தார். இயேசு தம் விண்ணகத் தந்தைக்கு தாம் கொடுத்த வாக்குறுதிக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்தார். நம்மைச் சார்ந்தவர்களிடமோ, அல்லது உதவி கேட்டு வருவோரிடமோ நாம் கொடுத்த வாக்குறுதிகள் எத்தனை எத்தனை? .

இன்றைய நாளில் சிந்தித்து, தியானித்து, தவறாக உள்ளதைத் திருத்திக்கொள்ள இறைவன் நம்மை அழைக்கின்றார். கொடுத்த வாக்குறுதிக்கேற்ப நம் மாட்சிமைமிகு விண்ணகத் தந்தையும், அதை நிறைவேற்றிட நம் மீட்பரும் எவ்வாறு நடந்து நமக்கு விண்ணகப் பரிசை தந்தார்களோ, அதே போல நாமும் கீழ்ப்படிவோம். வாக்குறுதி கொடுப்பது அனைவருக்கும் எளிது. ஆனால் அதன்படி வாழ்ந்து காட்டுவது பெரும் சவால். எனவே நம் முன்மாதிரியான நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம் கண்முன் கொண்டு வாழ முடிவெடுப்போம். முடிவில்லா வாழ்வில் அவரோடுப் பங்கு பெறுவோம்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**பொதுக்காலம் 26-ஆம் ஞாயிறு**

எசே 18: 25-28
திபா 25: 4-5, 6-7, 8-9
பிலி 2:1-11
மத் 21: 28-32

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் I**